DINAMANI 02 OCT 2010

# பசுமை இயக்க விழிப்புணர்வுப் பேரணி

திருச்சி, அக். 1: திருச்சியில் ஈஷா அறக்கட்டளை சார்பில் வெள்ளிக்கிழமை பசுமை இயக்க விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

ஈஷா அறக்கட்டளை சார்பில் சனிக்கிழமை (அக். 2) செயின்ட் ஜோசப் கல்லூரியில் மகா சத்சங்கம் மற்றும் திருச்சி பசுமை இயக்கம் தொடக்க விழா நடைபெறுகிறது. ஈஷா அறக்கட்டளை நிறுவனர் ஜக்கி வாசுதேவ் கலந்து கொண்டு மகா சத்சங்கம், கூட்டுத் தியானம் ஆகியவற்றை நடத்துகிறார்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் கே. என். நேரு, திருச்சி பசுமை இயக்கத்தைத் தொடக்கி வைக்கிறார்.

இதையொட்டி, வெள்ளிக்கிழமை பசுமை இயக்க விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியைத் தொழிலதிபர் கே. என். ராமஜயம் தொடக்கி வைத்தார். திருச்சி மாநகராட்சி மேயர் எஸ். சுஜாதா பேரணியில் சென்றவர்களிடம் மரக்கன்றுகளை வழங்கினார்.

பேரணி கலைஞர் அறிவாலயம் அருகில் இருந்து செயின்ட் ஜோசப் கல்லூரி வரை நடைபெற்றது.

பேரணியில் ஈஷா அறக்கட்டளை கிழக்கு மண்டலப் பொறுப்பாளர் தில்லை செந்தில் பிரபு, தன்னார்வத் தொண்டர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் ஈஷா அறக்கட்டளை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பசுமை இயக்க விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட கல்லூரி மாணவிகள்.